# செராஸில் சட்டவிரோத வியாபாரங்கள் முறியடிப்பு




கோலாலம்பூர், ஜூலை 25-
கே.எல். ஸ்ட்ரைக் ஃபோஸ் எனும் சிறப்பு நடவடிக்கையின் கீழ் ஆவணங்கள் இல்லாத வெளிநாட்டுத் தொழிலாளர்களை பணியில் அமர்த்தியிருக்கும் தொழில் துறைகளுக்கு எதிராக டிபிகேஎல் எனப்படும் கோலாலம்பூர் மாநகர் மன்றமும் குடிநுழைவு இலாகாவும் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு அவ்வாறான வியாபாரத் தளங்களை முடக்கியது.

இந்தக் கூட்டு நடவடிக்கையானது தாமான் புடு உலு, செராஸ் ஆகிய பகுதிகளில் முன்னதாக அடையாளம் காணப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. குடிநுழைவு அதிகாரிகள் தொழிலாளர்களின் பாஸ்போர்ட்டுகளையும் வேலை செய்ய அனுமதிக்கும் ஆவணங்களையும் ஆய்வு செய்தனர்.

பொது இடங்களில் இடையூறு ஏற்படுத்துவது உட்பட சட்டவிரோதமாக வெளிநாட்டுத் தொழிலாளர்களை பணியில் அமர்த்தியது வரையிலான குற்றங்களுக்காக டிபிகேஎல் 10 கம்ப்வுண்ட் நோட்டீசுகளை வழங்கியது.

அதேசமயம், அசுத்தமாக இருந்த உணவுக் கடைகளுக்கு எதிராகவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். இழுத்து மூடும்படி இரண்டு உணவுக் கடைகளுக்கு உத்தரவிடப்பட்ட நிலையில் மற்றொன்றின் லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டது. மேலும் மூன்று கடைகளின் மேசை நாற்காலிகளை பொது மக்களுக்கு இடையூறாக நடைபாதைகளில் வைக்கப்பட்டிருந்ததற்காக பறிமுதல் செய்யப்பட்டன.

அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் லைசென்ஸ் இன்றி வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு எதிராகவும் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் வர்த்தக லைசென்ஸ்சுகளை தவறாகப் பயன்படுத்தியவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுத்தனர்.

இதுபோன்று சட்டத்திற்கு புறம்பாக ஆவணங்கள் இல்லாத வெளிநாட்டுத் தொழிலாளர்களை பணியில் அமர்த்தியிருப்பது, நடை பாதையில் மேசை நாற்காலிகளை வைத்து பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பது போன்றவற்றை காணும் பொது மக்கள் தொடர்ந்து புகார் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட டிபிகேஎல் இதுபோன்ற ஒருங்கிணைக்கப்பட்ட பரிசோதனை நடவடிக்கைகள் தொடரும் என்று தெரிவித்தது.